DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 46/2019**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. சீனிவாசன் | Caste: | |
| Father's/Husband Name: | சிவன் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 07.03.2026

( எதிரி ஆஜர்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். திருவாடானை காவல்நிலைய கு.எண். 127/2019 சட்டப்பிரிவுகள் 294(b), 506(i) IPC and sec 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (POA) Act வழக்கினை புலன் விசாரணை மேற்கொண்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் வேறு பணியில் உள்ளதால் தற்போது உடனே ஆஜராகவில்லை என்பதால் தற்போதைய காவல்துணைக் கண்காணிப்பாளர் என்ற முறையில் வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.06.2019ம் தேதி திருவாடானை காவல்நிலைய கு.எண். 127/2019 வழக்கை புலன் விசாரணை மேற்கொள்ள காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண் C.No. 20/SJ&HR/RMD/2019, Dated: 30.06.2019 ன் கீழ் உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ. 5**. காவல் துணைக்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:01:49 +0530

கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் அதே தினம் 15.30 மணிக்கு சம்பவ இடமான கோவிந்த மங்கலம் பஸ் ஸ்டாப் சென்று சாட்சிகள் நாகநாதன், சின்னத்தம்பி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றுள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.6**. வரைபடம் **அ.சாஆ.7**. பின்பு அதே தினம் சாட்சிகள் செல்வகுமார், தமயந்தி, வீரமுத்து, வீரய்யா, குப்பமுத்து, கயல்விழி, குப்பு மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான நாகநாதன், சின்னத்தம்பி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்துள்ளார். 02.07.2019 ம் தேதி வழக்கின் வாதி மற்றும் எதிரிக்கு சாதி சான்று கோரி திருவாடானை வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். அதனை தொடர்ந்து 10.07.2019 ம் தேதி 15.30 மணிக்கு சின்னகீரமங்கலம் பஸ்ஸ்டாப் எதிரே நின்றிருந்த எதிரி பெருமாளை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். 11.07.2019 ம் தேதி சாட்சிகள் செல்வகுமார், தமயந்தி ஆகியோர்கள் மற்றும் புகார் மனுவை பெற்று மனு ரசீது வழங்கிய பெண் தலைமை காவலர் விஜி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 11.07.2019 ம் தேதி சாட்சிகள் செல்வகுமார், தமயந்தி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பெண்கள் வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் பிரிவு 4 ஐ சேர்த்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சாஆ.8**. 26.08.2019 ம் தேதி புகார்தாரருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய திருவாடானை வட்டாட்சியர் திருமதி சாந்தி அவர்களையும், எதிரி பெருமாளுக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:01:53 +0530

திருவாடானை துணை வட்டாட்சியர் திருமதி பிரேமா அவர்களையும் விசாரித்து சாதிச்சான்றிதழ்கள் பெற்று அவர்களின் வாக்குமுலங்களை பதிவு செய்துள்ளார். புகார்தாரருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்று **அ.சா.ஆ.9.** எதிரிக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்று **அ.சா.ஆ.10.** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அரவிந்த ராஜன் அவர்களை 26.08.2019 ம் தேதி விசாரித்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்து விசாரணையை முடித்து 26.08.2019 ம் தேதி எதிரி பெருமாள் மீது இதச பிரிவுகள் 294(b), 506(i) IPC and sec 4of TNPWH Act and sec 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (POA) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

சம்பவம் 28.06.2019 ம் தேதி நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 30.06.2019 ம் தேதி இரண்டு நாட்கள் காலதாமதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி , சொன்ன நேரத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றும், புகார் கொடுத்திருந்தால் புகாரில் கையெழுத்து இருக்கும் என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் புகார்தாரர் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:01:58 +0530

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் இந்த எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:02:01 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)